## பிப்ரவரி - 27

**"உங்கள் சாந்த குணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக"**

**- பிலி 4 : 5**

"சாந்த குணம்" என்பதற்கு உபயோகப்படுத்தியிருக்கிற கிரேக்க வார்த்தை நியாயம் என்ற கருத்தைக் கொண்டிருப்பதாகவும், அது நமது உரிமைகளை மிகவும் பலமாக கட்டாயப்படுத்தி வாங்க வேண்டியதில்லை என்ற கருத்தையும் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. கர்த்தரோடு ராஜ்ஜியத்தில் இருக்கப் போகிற எல்லாரிடத்திலும் நிச்சயமாகக் கேட்கப்படுகிற குணங்கள் இரக்கமும், காருணியமுமாகும். நீதி நம்மிடம் கேட்கும் எல்லா காரியங்களையும் செய்வதில் கூடுமானவரை உண்மையும், மற்றவர்களிடமிருந்து எதிர்பார்க்கும் நமது எல்லா நீதியின் தேவைகளுக்குரியவைகளில் இரக்கமும் இருக்க வேண்டும் என்பது நமது சட்டமாக இருக்க வேண்டும். இவ்விதமாக நாம் பரலோகத்திலிருக்கும் நமது பிதாவுக்குப் பிள்ளைகளாயிருப்போம். ஏனெனில் அவர் நன்றியறியாதவர்களுக்கு நன்மை செய்கிறவராகவும், இரக்கமுள்ளவராகவும் இருக்கிறார்.

- Z ’03, 7 (R 3128).

உண்மையான கிறிஸ்துமார்க்கம் அதிதீவிர மதபற்றை உற்பத்தி செய்கிறதில்லை. அது குணத்தில் ஞானம், நீதி, அன்பு, வல்லமை இவைகளை ஒன்று சேர்க்கிறது போல, அது மற்றவர்களுடைய உரிமைகளில் கவனமுள்ளதாயிருக்கிறது. நிறைவான நியாயத்தையும் அன்பையும் அவர்களுக்குக் காட்டுகிறது. அது இந்த தத்துவங்களுக்கு இசைவாக ஒருவரை வைத்துக் கொண்டிருக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது. ஆகையால், அது மிதமிஞ்சிய எண்ணத்தையும், வார்த்தையையும், கிரியையும் தவிர்த்து ஜீவியத்தின் காரியங்களில் மத்திய போக்கை அனுசரிக்கிறதினால் அது சாந்தக் குணத்தை அப்பியாசிக்கிறது. தேவனிடத்தில் அது மற்றவர்களுடைய உரிமைகளுக்குள்ள மதிப்புக்கு இசைவாக அன்பு கலந்த பக்தியை பிரதிபலிக்கிறது. ஆகையால், அது எல்லாரிடத்திலும் சாந்தமாயிருக்கிறது.

- P ’30, 30.

**ஒத்த வாக்கியங்கள் :-**

ஏசா 40:11; 42:3; 2கொரி 10:1; மத் 11:29; 23:37; 2சாமு 22:36; சங் 18:35; கலா 5:22; 2தீமோ 2:24-26; தீத் 3:1; யாக் 3:17; எபி 2:17,18; 4:15;

**கோபுர வாசிப்பு** : Z ’13, 167 (R 5249)

**வினாக்கள்** : இந்த வாரத்தில் நான் சாந்தமாயிருந்தேனா? எந்த சந்தர்ப்பங்களின் மத்தியில்? உதவியாயிருந்ததும் இடையூறாயிருந்ததும் எது? அதன் பலாபலன் என்ன?